1987 மார்ச் 26]

5. அறிவிப்புகள்--தொடர்ச்சி.

(இ) இறுதித் துணை நிதி அறிக்கை, 1986-87.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1986-87 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :

"In pursuance of Article 206, Clause 2, read with Article 203, Clause 3, of the Constitution of India, I, Sundarlal Khurana, Governor of Tamil Nadu, hereby give my recommendations to the moving in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for further grants for the year 1986-87."

8. இறுதித் துணை நிதி அறிக்கை, 1986-87—வாக்கெடுப்பு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986-87 ஆம் ஆண்டிற்கு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 24—3—1987 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப் பெற்றுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை, 1986-87 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப் பெற்றன.

நிறைவேற்றப்பட்ட 1986-87 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்.

கோரிக்கை.		(ரூபாய் ஆயிரத்தில்.)
A.	வருவாய் கணக்கில் செலவு—	
1	நில வரித் துறை	1
2	மாநில ஆயத் தீர்வை துறை	37,17
3	மோட்டார் வண்டிகள் சட்டங்கள் —நிர்வாகம்	1